2014 ஆகஸ்ட் 6]

**358**—

## மாணவர் விடுதி

***47573—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், தென்பொன்முடியிலுள்ள E.A.B. அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், தென்பொன்முடி, E.A.B. அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

*முற்பகல் 10-50*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவுள் எங்கும் இருக்க முடியாது என்பதற்காகவே தாயைப் படைத்தான் என்னும் பழமொழிக்கேற்ப இன்று தமிழினத்தினுடைய தாயாக விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட தென்பொன்முடி பகுதியில் அமைந்துள்ள E.A.B. அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்போது 500 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 2011-2012 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்த நடுநிலைப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற காரணத்தினால், வருங்காலத்தில் அந்தப் பள்ளிக்கு மாணவர் விடுதி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 359, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**359**—

### தரம் உயர்த்துதல்

***5474—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், குனிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS